# ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி

## பங்கஜம் நகர்: போடிநாயக்கனூர்

# நாற்பத்தி எட்டாம் ஆண்டறிக்கை

ஏலம் மணக்கும் மேற்கு தொடர்ச்சி மலைகளின் பாதம் தொட்டு ஏலம் மணக்கும் போடி மாநகரத்தில் அமைந்திருக்கும் எமது ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி **நாற்பத்தி எட்டாம்** ஆண்டு விழாவினை உங்களது நல்லாசியுடனும் இறைவனுடைய அருளாசியுடனும் மிகச் சிறப்பாக கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

ஏல விவசாயிகள் சங்கத்தின் தலைவரும் உண்மை, உழைப்பு, உயர்வு என்று சிகரம் தொட்ட எங்கள் கல்லூரியின் தலைவரும் இவ்வினிய விழாவிற்கு தலைமை ஏற்றிருக்கும் **உயர்திரு.S.V.சுப்பிரமணியன்** அவர்களே! கல்லூரியின் வளர்ச்சிக்கு உற்ற தோழனாக இருக்கும் உபதலைவர் **உயர்திரு.S.இராமநாதன், M.A.,** அவர்களே! எண்ணியதை எண்ணியது போன்று செயல்படும் கல்லூரியின் செயலர் **உயர்திரு.R.புருஷோத்தமன், M.A.,B.Ed.,** அவர்களே!

இமயம் போல் வளரும் நம் கல்லூரிக்குத் தூண்களாக விளங்கும் ஆட்சிக்குழு உறுப்பினர்களே மரியாதைக்குரிய பொதுக்குழு உறுப்பினர்களே, மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஏல விவசாயிகள் சங்க நிர்வாகிகளே்

இன்றைய சிறப்பு விருந்தினர்,

**மதுரை கல்லூரிக் கல்வி இணை இயக்குர்**

**முனைவர். P.பொன்முத்துராமலிங்கம், Ph.D., அவர்களே**

பெற்றோர்களே விருந்தினர்களே பேராசிரியப் பெருமக்களே அலுவலக நண்பர்களே நமது கல்லூரியின் அருமை செல்வங்களாம் முன்னாள் இந்நாள் மாணவ, மாணவிகளே நமது கல்லூரியின் **நாற்பத்தி எட்டாம் ஆண்டு** விழாவைச் சிறப்பிக்க வருகை புரிந்திருக்கும் உங்கள் அனைவரையும் இருகரம் கூப்பி

வரவேற்று **2021 - 2022** கல்வியாண்டிற்குரிய ஆண்டறிக்கையை சமர்ப்பிக்கும் இத்தருணத்தில் முதற்கண் நமது கல்லூரியில் நடந்த முக்கிய நிகழ்வுகள் மற்றும் சாதனைகளைப் பட்டியலிடுகிறேன்.

**கல்லூரியில் நடந்த முக்கிய நிகழ்வுகள் மற்றும் சாதனைகள்:**

**1. கல்லூரி வளர்ச்சி பணிகள் :**

2021-2022 ஆம் கல்வி ஆண்டில் நமது கல்லூரி விளையாட்டு மைதானத்தில் மாணவர்களின் நலனைக் கருதி ரூ 7,00,000/- மதிப்பீட்டில் திறந்த வெளி அரங்கம் கட்டப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் கல்வி ஆண்டில் பழைய ஆய்வுக்கூடங்கள் **Renovation work** வேலைகள் நடைபெற்று தற்பொழுது வகுப்புகள் நடந்து வருகிறது.

நமது கல்லூரியின் சுப்புராஜ் அரங்கத்தின் மேல்மாடியில் **RCC** வேலை நடைபெற்று மூன்று 3000 லிட்டர் கொள்ளவு கொண்ட புதிய தண்ணீர் தொட்டி **(Sintex)** புதிதாக வைக்கப்பட்டுள்ளது.

நமது கல்லூரியில் அனைத்து துறைகளுக்கும் ஆங்காங்கே புதிதாக **R.O Water** புதிதாக வைக்கப்பட்டுள்ளது.

நமது கல்லூரியின் மாணவ, மாணவர்களின் நலன் கருதி wifi வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

06.04.2022-ம் தேதி விளையாட்டு விடுதி கட்டிடம், ஆய்வுக்கூட கட்டிடம் மற்றும் மாணவியர்கள் 27 கழிப்பறை திறப்பு விழா நடைபெற்றது.

பாலு அழகணன் பில்டிங் புதுப்பித்தல் வேலைகள் தற்பொழுது நடைபெற்று கொண்டிருக்கிறது.

நமது கல்லூரியில் உள்ள உள்விளையாட்டு அரங்கத்தில் புதிதாக மின்விளக்குகள் மற்றும் மின்னிணைப்பு வேலைகள் சிறப்பாக செய்து முடிக்கப்பட்டுள்ளது.

நமது கல்லூரி தோட்டத்தில் உள்ள மா மரங்களை பராமரிப்பதற்காக அங்குள்ள மரங்களுக்கும் புதிதாக நாவல் நாற்றுக்கும் சொட்டுநீர் பாசனம் போடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

நமது கல்லூரியில் உள்ள **Sports Hostel** வளாகத்தில் **New Garden** உருவாக்கப்பட்டு அதனை பராமரிக்கப்பட்டு வருகிறது.

**2. பல்கலைக்கழக மானியக்குழு (UGC), DST மற்றும் மத்திய அரசின் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள் வழங்கிய நிதிஉதவிகள்:-**

நமது கல்லூரியில் **UGC-100 Bedded Sports Hostel** – திட்டத்தின் கீழ் கட்டி முடித்த **Sports Hostel**-க்கு கடைசி தவணையாக ரூ.15 லட்சம் இந்த கல்வியாண்டில் பெறப்பட்டு உள்ளது. இதன் திறப்பு விழா நடப்பாண்டில் நடைபெற்றது. இந்த கட்டிடத்தை நமது கல்லூரி தலைவர் திரு.எஸ்.வி.சுப்பிரமணியன் அவர்கள் திறந்து வைத்து விழாவிற்கு தலைமை தாங்கினார்.

**UGC-Women's Hostel** – திட்டத்தின் கீழ் கட்டி முடித்த மகளிர் விடுதிற்கான கடைசி தவணையாக ரூ.8 லட்சம் பெறப்பட்டு உள்ளது.

## 3. Research Guidance and Research Publication:

| Department | Name | Ph.D Pursuing | Ph.D submited | Ph.D awarded |
|---|---|---|---|---|
| Mathematics | Dr.K.Krishnan | 1 | 1 | 2 |
| Commerce | Dr.S.Balamurugan | 4 | - | - |
| | Dr.A.Sujatha | 2 | 2 | - |
| | Dr.T.Ramalakshmi | 3 | 1 | - |
| Computer Science | Dr.S.Sivakumar | 5 | 1 | 1 |
| | Dr.R.Murugesan | 4 | - | - |
| Chemistry | Dr.G.Ravindran | 4 | - | - |
| Botany | Dr.C.Gopi | 1 | - | - |
| English | Dr.C.Palanivelrajan | 4 | - | - |
| | Dr.B.Anandprasad | 2 | - | - |
| | Dr.V.Vimala | 1 | 3 | - |
| Economics | Dr.Senthilkumar | 2 | - | - |

2010-ம் கல்வியாண்டு முதல் பேராசிரியர்களின், ஆராய்ச்சி வழி காட்டுதலுக்கும் மற்றும் ஆராய்ச்சி கட்டுரைகள் பிரசுரித்தமைக்கும் நமது கல்லூரி நிர்வாகம் தலா ரூபாய் 1000/- ரொக்கப் பரிசு அளித்து கௌரவிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## 4. வேலைவாய்ப்பு வழிகாட்டி மற்றும் ஆலோசனை மையம் & IAS Study Circle (Career & Counseling Cell)

18.08.2021 முதல் 30.08.2021 வரை முதலீட்டாளர்கள் வைப்புநிதி முகவர்களுக்கான இலவசப் பயிற்சி முகாம் **SEBI (Securities Exchange Board**

**of India)** நிறுவனத்தாரால் நடத்தப்பட்டது. பன்னிரெண்டு நாட்கள் நடைபெற்ற பயிற்சி முகாமில் நமது கல்லூரியின் பல்வேறு துறை சார்ந்த மாணவர்கள் 30 பேர் கலந்து கொண்டனர். இம்முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

நந்தி மற்றும் மகேந்திரா பிரைட் கிளாஸ்ரூம் இணைந்து நடத்திய மூன்றாமாண்டு மாணவர்களுக்கான ஏழு நாட்கள் புத்தாக்கப் பயிற்சி முகாம் 20.09.2021 முதல் 26.09.2021 வரை நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட இறுதியாண்டு மாணவர்களுக்கு **Study materials,** சான்றிதழ்கள் மற்றும் பயிற்சியில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு கேடயங்கள் வழங்கப்பட்டது. இப்பயிற்சி முகாமில் இறுதியாண்டு பயிலும் 640 மாணவ, மாணவியர்கள் பங்கேற்று பயிற்சி வகுப்பினைச் சிறப்படையச் செய்தனர்.

மூன்றாமாண்டு மாணவர்களுக்கு நான்கு நாட்கள் இலவச வேலை வாய்ப்பு பயிற்சி முகாம் மற்றும் வேலை வாய்ப்பிற்கான திட்டமிடல் வகுப்பு நடைபெற்றது. 23.03.2022 முதல் 25.03.2022 வரை நடைபெற்ற பயிற்சி வகுப்பு **TNASDCL** என்ற அரசு சார்ந்த பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்பட்டது. இப்பயிற்சி வகுப்பினை அரசு பயிற்சி அலுவலர் திரு.ராஜேஸ் அவர்கள் சிறப்பாக நடத்தினர். அரசு வேலை வாய்ப்பினை எளிதாக பெறுவதற்கான இப்பயிற்சி வகுப்பில் 564 மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

08.04.2022 அன்று அரசுப் பொதுத்தேர்விற்கான விழிப்புணர்வு மற்றும் **Spoken English** வகுப்புகள் நடத்தப்பட்டது. இதில் காலை மூன்றாமாண்டு மாணவர்களுக்கும் மாலை முதலாமாண்டு மாணவர்களுக்கும் என 540 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

குறிஞ்சி டெக்னாலஜி நிறுவனத்தினரால் பயிற்சி வகுப்பு மற்றும் நேர்முகத் தேர்வில் நம் கல்லூரி கணினித்துறை, தகவல் தொடர்பியல் மற்றும் கணினிப்பயன்பாட்டுத் துறையைச் சார்ந்த 5 மாணவர்கள், தனித்திறமையின் அடிப்படையில் மாதம் 23,000/- ஊதியத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 26.04.2000 முதல் 29.04.2022 வரை நமது கல்லூரியில் பயிற்சி வகுப்பும் 02.05.2022 அன்று குறிஞ்சி டெக்னாலஜி அலுவலகத்தில் நேர்முகத் தேர்வும் நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மாத்ரூபூமி பவுண்டேசன் நிறுவனத்தரால் 29.04.2022 அன்று பொது அறிவினை வளர்த்தல் மற்றும் போட்டிகளில் பங்கு பெறுதல் என்ற பொருண்மையில் நிறுவனத்தின் பயிற்சி ஆசிரியர் நாகபிரசாந் அவர்களால் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இதில்

மூன்றாமாண்டு மாணவர்கள் 400 பேர் காலையிலும், முதலாமாண்டு மாணவர்கள் 305 பேர் மாணவியரும் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

10.05.2022 முதல் 13.03.2022 வரை மெட்ராஸ் இன்ஸ்ட்டியூசன் ஆப் ஒக்கேசனல் எசுகேசனல் டிரெய்னிங் சென்னை நடத்திய மாணவர்களுக்கான நான்கு நாள் வேலை வாய்ப்பு பயிற்சி வகுப்பு மற்றும் நேர்முகத் தேர்வு நடைபெற்றது. இதில் மூன்றாமாண்டு மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். இப்பயிற்சி வகுப்பில் முதல் மூன்று நாட்கள் வேலை வாய்ப்புப் பயிற்சியும், நான்காம் நாள் நேர்முகத் தேர்வும் நடைபெற்றது. மூன்று கட்டமாக நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் (இணையவழி நேர்முகத் தேர்வு உட்பட) 109 மாணவர்கள் தேர்வாகி நம் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி வரலாற்றில் முதன் முறையாக 05.06.2022 அன்று மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தேனி மாவட்ட அளவில் நடைபெற்ற தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் ரிலையன்ஸ் நிப்பான் இன்சூரன்ஸ், எஸ்.பி.ஐ லைப் இன்சூரன்ஸ். பஞ்சாப் நேஷனல் பாங்க், ஐ.சி.ஐ.சி.ஐ மற்றும் முத்தூட் பைனாஸ் போன்ற சிறப்பான தனியார்துறை நிறுவனங்கள் உட்பட சுமார் 27 தனியார்துறை நிறுவனங்கள் கலந்து கொண்டன. இம்முகாமில் 377 வேலை நாடுநர்கள் பல்வேறு பகுதியகளில் இருந்து வருகை புரிந்து நேர்முகத் தேர்வில் கலந்து வெற்றியும் பெற்றுள்ளனர். நேர்முகத் தேர்வில் 221 வேலை நாடுநர்களுக்கு நேர்முகத் தேர்வு அன்றே பணிக்கடிதம் வழங்கப்பட்டது. மேலும் 313 மாணவர்களுக்கு இரண்டாம் கட்ட தேர்வுக்கான அழைப்புக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## 5. உள்தர மதிப்பீட்டு நிர்ணய மையம் (Internal Quality Assurance Cell-IQAC)

உள்தரமதிப்பீட்டுமையம் நமது கல்லூரி முதல்வரைத் தலைவராகக் கொண்டு 2007-இல் தோற்றுவிக்கப்பட்டது. **IQAC** ன் **Co-ordinator** ஆக Dr.R.முருகேசன், அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேலும் **NAAC** ன் **Co-ordinator** ஆக **Dr.K**.கிருஷ்ணன், அவர்கள் நியமனம் செய்யப்பட்டு உள்ளார். இம்மையம் கல்லூரியின் ஒவ்வொரு துறையும் எங்கணம் செயல்படுகிறது என்பதை அறிந்து கொள்ளும் நோக்கோடு தேசிய தரமதிப்பீட்டுக் குழு **(NAAC)** பரிந்துரையின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இம்மையத்தின் பிரதான பணியானது கல்லூரியின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு தேவையான உணர்வுள்ள, நிலையான மற்றும் வினைத்திறனுள்ள அமைப்பை உருவாக்குவதாகும்.

இக்கல்வியாண்டில் முதலாமாண்டு மாணவர்களுக்காக **Student Induction Programme** 15.09.2021 அன்று முதல் 18.09.2021 வரை 4 நாட்கள் நடத்தப்பட்டது. பேராசிரியர்.**G.**ராஜ்மோகன் மற்றும் **Dr.C.**கோபி அவர்கள் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டனர்.

உள்தர மதிப்பிட்டு மையம் மேற்பார்வையில் 22 துறைகள் மற்றும் 43 இதர மையங்களின் தகவல்களை சரிபார்த்து, 2019 -2020 ஆண்டிற்கான **Annual Quality Assurance Report (AQAR)** அறிக்கையைத் தயாரித்து அவ்வறிக்கையை தேசிய தரமதிப்பீட்டுக் குழுவிற்கு 01.12.2021 அன்று சமர்பிக்கப்பட்டுள்ளது.

கல்லூரியின் தரத்தை ஒரு படி மேலே கொண்டு செல்ல இக்கல்வியாண்டில **National Institutional Ranking Frame work (NIRF)** 2022 அறிக்கையை 10.02.2022 அன்று அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

உள்தர மதிப்பீட்டு மையம் சார்பில் தேனி மாவட்ட மேன்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கான **“Enhancing Teacher’s Collecive Efficacy During Pandemic”** என்னும் தலைப்பில் 17.03.2022 அன்று ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆண்டுதோறும் உள்தர மதிப்பீட்டு மையம் மூலமாக **All India Survey on Higher Education (AISHE)** அறிக்கை, **(ashie.gov.in)** என்ற இணையதள முகவரியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. 2020-2021 ஆண்டிற்கான **All India Survey on Higher education (AISHE)** அறிக்கை 29.03.2022 அன்று அரசு போர்டலில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

மேலும் ஆசிரியர்களுக்கு **NAAC** பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த, உள்தர மதிப்பீட்டு மையம் சார்பில் 02.05.2022 அன்று ‘**Process and Preparation of Accreditation and Assessment of NAAC – Discussion”** என்னும் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

கல்லூரியின் **NAAC**-ன் **Third Cycle** தரமதிப்பீட்டிக்கான ஆவணங்கள் தயார் செய்வதற்கான பணி இம்மையத்தின் வழிகாட்டுதலின் படியும், அனைத்து துறைகளின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைப்பெற்று வருகிறது.

நம் கல்லூரி இணையதளம், இம்மையத்தின் மூலமாக, நம் கல்லூரியின் அன்றாட நிகழ்வுகளை, கல்லூரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 6. Extension Activities :

ஒரு மாணவனுக்கு படிப்பைத் தவிர, அவரவர் விருப்பத்திற்கேற்ப குறிப்பிட்ட துறையில் தனித்திறமையை வளர்க்க, வேலைக்குச் செல்வோர், சுயதொழிலில் ஈடுபடுவோர், ராணுவம், போலீஸ், விளையாட்டில் ஈடுபடுவோர் மற்றும் நுண்கலை என்று சொல்லக் கூடிய **Fine Arts**-ல் ஈடுபடுவோார் என்று முதலாமாண்டு மாணவ, மாணவியர்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்து அவர்களுக்கு வாரம் ஒரு முறை சிறப்பு வகுப்புகள் பேராசிரியர்களால் நடத்தப்படுகின்றது. இதன் பயனாக நமது கல்லூரியில் 3 ஆண்டுகள் முடித்து வெளியே செல்லக் கூடிய ஒவ்வொரு மாணவனும், ஒரு துறையில் சிறந்து விளங்கி, தமது வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பர் என்பதில் பெருமை கொள்கிறேன்.

## 7. National Academic Repository (NAD) Cell :

மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையின் அறிவுறுத்தலின்படி அனைத்து கல்லூரி மாணவர்களுக்கும் **NAD–ID** கணக்கு தொடக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. அறிவுறுத்தலின்படி மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் கீழ் இயக்கும் நமது கல்லூரியில் உள்ள அனைத்து துறை மாணவர்களுக்கும் **NAD – ID** தொடங்கப்பட்டுள்ளது. இதில் நமது கல்லூரியின் சார்பாக முதன்மை அதிகாரியாக **(Nodal Officer) Dr. R.** முருகேசன், கணினி அறிவியல்துறை பணியாற்றி வருகிறார். இப்பணி கல்லூரி அலுவலர்களின் உதவியோடு செவ்வனே செய்யப்பட்டு வருகிறது.

## 8. Staff Grievances Redressal Cell:

நமது கல்லூரியில் ஆசிரியர் - அலுவலர் குறை தீர் மன்றத்தின் மூலமாக ஆசிரியர் - அலுவலர் பல்வேறு குறைகளை கேட்டறிந்து அவைகளுக்கு மிகச் சிறந்த முறையில் மூத்தப் பேராசிரியர்கள் மற்றும் முதல்வர் அவர்களின் ஆலோசனைகளின்படி தீர்வு காணப்பட்டது. இந்த மன்றத்தின் ஒருங்கிணைப்பாளராக **Dr. S.** பாலமுருகன், துணை முதல்வர் மற்றும் வணிகவியல்துறைத்தலைவர், அவர்கள் சிறப்பாகச் செயல்பட்டு ஆசிரியர், அலுவலரின் நலனின் அக்கறை கொண்டு ஆசிரியர்-அலுவலர் குறை தீர் மன்றத்தின் வளர்ச்சிக்காக பணியாற்றி கொண்டிருக்கிறார்.

## 9. துறை வாரியான செயல்பாடுகள் :

### A. வணிகவியல் துறை (DEPARTMENT OF COMMERCE)

வணிகவியல் துறைசார்பாக 21.11.2021 அன்று முன்னால் பொறுப்பு முதல்வர் **Dr.T.** ராஜகுமரன் அவர்களுக்கு பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது. இந்த விழாவில் துறையின் பேராசிரியர்களும் மற்றும் முன்னாள் பேராசிரியர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் 09.12.2021 அன்று வணிகவியல் துறையின் சார்பாக இளங்கலை மூன்றாம் ஆண்டு முதுகலை முதலாண்டு மற்றும இரண்டாமாண்டு மாணவர்களுக்காக தேனி வருமான வரி துறையின் சார்பாக வருமான வரித்துறை அலுவலர்கள் திரு.அம்பேத்கர், திரு.நாராயணன் மற்றும் தணிக்கையாளர் திரு.குமரேசன், போடிநாயக்கனூர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். மாணவர்களுக்கு போட்டி தேர்வுகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசும் மற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

வணிகவியல் துறையின் சார்பில் 17.12.2021 அன்று துறையில் உள்ள அனைத்து மாணவிகளுக்கும் ஒழுக்க நெறிமுறைகள் சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

23.12.2021 அன்று வணிகவியல் துறையின் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் "Leadership Essentials" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக முனைவர்.R.சுரேஷ்குமார், Head, Department of Commerce, Government Arts College .ஆண்டிபட்டி. பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். நமது கல்லூரி முதல்வர் முனைவர் **S. சிவகுமார்** தலைமையேற்று சிறப்பித்தார். துறைத்தலைவரும் மற்றும் பேராசிரியர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

14.05.2022 அன்று விருதுநகர் VHN செந்தில்குமார நாடார் கல்லூரியில் வணிகவியல் துறை சார்பில் நடைபெற்ற COMFEST PLATINA'22 நிகழ்வில் நமது துறை சார்பாக 34 மாணவர்கள் பங்குபெற்றனர். **Dr.S.பாலமுருகன்** துணை முதல்வர் மற்றும் துறைத்தலைவர், பேராசிரியர்கள் **Dr.G.தங்கதுரை, Dr.S.யோகபிரியதர்ஸ்னி, Mrs.E.பாப்புலட்சுமி, Mr.K.மதன்குமார்,Dr.C.அழகர்ராஜா மற்றும் போக்குவரத்துறை மேற்பார்வையாளர் திரு.S.வெங்கடேசன்** ஆகியோர் வழிநடத்திசென்றனர். அங்கு நடைபெற்ற போட்டிகளில் எமது மாணவ மாணவியர்கள் சிறப்பாக பங்கேற்று "Short Film" போட்டியில் முதல் பரிசும் , "Open rally" என்ற போட்டியில் அனைத்து மாணவர்களும் பங்கேற்று இரண்டாம் பரிசினையும் தட்டிசென்றனர். மூன்று போட்டிகளில் முறையே "Product launching", என்ற போட்டியில் S.S.விகாசினி, J.காயத்திரி, T.K.ஐஸ்வர்யா, V.கீர்த்திகா மற்றும் M.ஹேமா, "Fireless cooking" என்ற போட்டியில் இரண்டாம் ஆண்டு மாணவன் அருள்பைரவன் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவி சுரேகா, "Silence is Strong" என்ற போட்டியில் சதிஸ்குமார், சரவணகுமார் ,

அகிலேஸ் , வசந்த் , வினோத் , மற்றும் சுகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டு மூன்றாம் பரிசை பெற்றனர்

16.05.2022-அன்று பெற்றோர் மற்றும் ஆசிரியர் கழக கூட்டம் முதலாமாண்டு மாணவர்களுக்கு கல்லூரி முதல்வர் **Dr.S.சிவகுமார்** தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதலாம் ஆண்டு மாணவர்களின் கல்வி, ஒழுக்கம் , எதிர்காலம் பற்றிய விழிப்புணர்வு சார்ந்த கருத்துகள் கலந்து ஆலோசிக்கப்பட்டது இதில் 72 பெற்றோர்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

மேலும் துறையின் சார்பாக 45 இளங்கலை மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் முறையே **Dr.A.சுஜாதா, Dr.G.தங்கதுரை, Dr.K.வனிதீஸ்வரி மற்றும் Dr.S.விஜயலட்சுமி** ஆகியோர் மூன்று நாட்கள் (11.04.2022 - 13.04.2022) Industrial visit சென்று வந்தார்கள். மற்றும் முதுகலை பயிலும் 24 மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் முறையே **Dr.V.கிருஷ்னகுமார் Dr.T.ராமலட்சுமி மற்றும் Mrs.E.பாப்புலட்சுமி** இரண்டு நாட்கள் (25.04.2022 -26.04.2022) Industrial visit சென்று வந்தார்கள்.

**Dr.S.பாலமுருகன்** அவர்கள் 2022-2024-வது கல்வியாண்டுக்கு மதுரை காமராஜர் பல்கலைகழக இளங்கலை வணிகவியல் பாடத்திட்ட வல்லுநர் குழுவில் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். மேலும் Teaching Learning Centre, Ramanujan College, University of Delhi -ல் 02.06.2021 முதல் 16.06.2021வரை "Managing Online Classes & Co- Creating MOOCS (Level 2)" என்ற தலைப்பில் இரண்டு வார புத்தாக்கப் பயிற்சி பெற்றுள்ளார். Shodhsamhita UGC Care Group ஆராய்ச்சி பத்திரிக்கையில் "Cost Analysis of Sugarcane Cultivation in Theni District" , "Factors Influence on Privacy issues in the E-Banking Websites – A Study with Reference to Commercial Banks in Theni District"., "Factor Influence on Satisfaction of E- Banking Users – A Study with Reference to Commercial Banks in Theni District", "Customer Attitude on Privacy Issues in the E-Banking Websites – A Study With Reference to Commercial Banks in Theni District" என்ற தலைப்பில் நான்கு ஆய்வு கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். Swayam Online Course மூலம் "Financial Accounting" என்ற தலைப்பில் 18 வார பயிற்சியை பயின்று வருகின்றனர்.

**Dr.A.சுஜாதா.** அவர்கள் Teaching Learning Centre, Ramanujan College, University of Delhi-ல் 22.01.2022 முதல் 05.02.2022 வரை Advanced Research Methodology என்ற தலைப்பில் இரண்டு வாரங்களுக்கான புத்தாக்க பயிற்சி பெற்றுள்ளார் மற்றும் நடப்பு கல்வியாண்டில் Swayam Online Course மூலம் "Basic of Digital Marketing என்ற Course முடித்துள்ளார். மேலும் "Tamil Nadu State Council for Higher Education சார்பில் 05.05.2022 முதல் 06.05.2022 வரை மதுரை காமராஜர் பல்கலைகழகத்தில் நடைபெற்ற "In – service Teacher Training programme – ல் கலந்து கொண்டு பயிற்சி பெற்றுள்ளார். இரண்டு ஆராய்ச்சி

மாணவர்கள் திருமதி.குணஸ்ரீ மற்றும் திரு.ஆண்டி அவர்கள் தங்களது ஆராய்ச்சி கட்டுரையை மதுரை காமராஜர் பல்கலைகழகத்தில் சமர்ப்பித்துள்ளனர். Jeyaraj Annapakiyam College மற்றும் ANJAC College – ல் பாடதிட்ட வல்லுநர் குழு உறுப்பினர் ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

**Dr.V.கிருஷ்ணகுமார்** அவர்கள் "A Study on Effective Water Resource Management for Agriculture" என்ற தலைப்பில் ஆய்வு கட்டுரை வெளியிட்டுள்ளார். "Best Academician Award" என்ற விருதை Cognizance academia என்ற அமைப்பில் இருந்தும் மற்றும் "Best Researcher Award of the year" என்ற விருதை Indian Academic Researcher's Association என்ற அமைப்பில் இருந்து பெற்றுள்ளார். மேலும் "Tamil Nadu State Council for Higher Education சார்பில் 05.05.2022 முதல் 06.05.2022 வரை மதுரை காமராஜர் பல்கலைகழகத்தில் நடைபெற்ற "In – Service Teacher Training programme – ல் கலந்து கொண்டு பயிற்சி பெற்றுள்ளார். மேலும் 31.03.2022 அன்று The Gandhigram Rural Institute –ல் நடைபெற்ற NAAC Sponsored National Workshop –ல் கலந்து கொண்டுள்ளார். 04.05.2022 அன்று மதுரை காமராஜர் பல்கலைகழகத்தில் நடைபெற்ற 'Entrepreneur Career and Innovation Hub"-ல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

**Dr.T.ராமலட்சுமி** அவர்கள் The Gandhigram Rural Institute- ல் "Impact of the After Epidemic on the Tamil Nadu Entrepreneurial Ecosystem" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வெளியிட்டுள்ளார். Teaching Learning Centre, Ramanujan College, University of Delhi-ல் 30.01.2022 முதல் 14.02.2022 வரை இரண்டு வாரங்களுக்கான Advanced Research Methodology Tools and Techniques என்ற தலைப்பில் புத்தாக்கப் பயிற்சி பெற்றுள்ளார். "Cost increase on LPG house hold in Tamil Nadu", "A Constriction women home Management Budget", "Awareness of online payment of Domestic LPG" என்ற தலைப்புகளில் மூன்று ஆய்வு கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். "A Study on LPG House hold Consumer expectation in Theni District". UGC Care Journal-ல் ஆய்வுக் கட்டுரை வெளியிட்டுள்ளார். கொடைக்கானல் Christian college –ல் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் பங்கேற்றுள்ளார். மேலும் "Tamil Nadu State Council for Higher Education சார்பில் 05.05.2022 முதல் 06.05.2022 வரை மதுரை காமராஜர் பல்கலைகழகத்தில் நடைபெற்ற "In – service Teacher Training programme – ல் கலந்து கொண்டு பயிற்சி பெற்றுள்ளார். 09.12.2021 "STRATEGY FOR MANAGING PERSONAL FINANCE" என்ற தலைப்பில், Vivekananda College of Arts and Sciences for Women – ல் National Level live Webinar –ல் நடந்த கருத்தரங்கில் கலந்துகொண்டு மாணவர்களுக்கு கருத்துகளை வழங்கினார். International Journal of Innovation in Social Sciences –ல் ADVISORY/EDITORIAL BOARD உறுப்பினராக தேர்வுசெய்யப்பட்டுள்ளார். M.சரண்யாதேவி அவர்கள் தங்களது ஆராய்ச்சி கட்டுரையை மதுரை காமராஜர் பல்கலைகழகத்தில் 08.10.2021 அன்று சமர்ப்பித்துள்ளார்.

**Dr.G.தங்கதுரை** அவர்கள் Teaching Learning Centre, Ramanujan College, University of Delhi –ல் 02.06.2021முதல் 16.06.2021 வரை "Managing Online Classes & Co-Creating MOOCS (Level 2)" இரண்டு வார புத்தாக்கப் பயிற்சியும் மற்றும் 22.04.22 முதல் 06.05.2022 வரை "Advanced Research Methodology" என்ற இரண்டு வார புத்தாக்கப் பயிற்சியும் முடித்துள்ளார். மேலும் 31.03.2022 அன்று The Gandhigram Rural Institute –ல் நடைபெற்ற NAAC Sponsored National Workshop –ல் கலந்து கொண்டுள்ளார். Swayam Online Course மூலம் "Financial Accounting" என்ற தலைப்பில் 18 வார பயிற்சியை பயின்று வருகின்றனர்.

**Dr.K.வனிதீஸ்வரி** அவர்கள் Teaching Learning Centre, Ramanujan College, University of Delhi -ல் from 18.05.2021 to 17.06.2021 நான்கு வாரத்திற்கான புத்தறிவுப் பயிற்சி பெற்றுள்ளார். "Factor Influence on Satisfaction of E- Banking Users – A Study with Reference To Commercial Banks in Theni District" , "Customer Attitude on Privacy Issues in The E-Banking Websites – A Study With Reference To Commercial Banks in Theni District" என்ற தலைப்புகளில் இரண்டு ஆய்வு கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். Swayam Online Course மூலம் "Financial Accounting" என்ற தலைப்பில் 18 வார பயிற்சியை பயின்று வருகின்றனர்.

**Dr.S.விஜயலட்சுமி** அவர்கள் Teaching Learning Centre, Ramanujan College, University of Delhi-ல் கலந்து கொண்டு 22.04.2022 முதல் 06.05.2022 வரை இரண்டு வாரங்களுக்கான புத்தாக்க பயிற்சி பெற்று உள்ளார். Government of Karnataka Department of Collegiate Education நடத்திய ஒரு வாரத்திற்கான தேசிய அளவிளான ஆசிரியர் மேம்பாட்டு திட்டத்தில் 5.07.2021லிருந்து 11.07.2021 வரை கலந்து கொண்டு "Information in Indian Education through New Education Policy – Challenges and Opportunities" என்ற தலைப்பில் பயிற்சி பெற்றுள்ளார்.

எமது கல்லூாரியின் உதவி பேராசிரியர் **Dr.S.யோகபிரியதர்ஸ்னி** AMET மற்றும் HRDC நடத்திய இரண்டு வாரத்திற்கான ஆசிரியர் மேம்பாட்டு திட்டத்தில் 24.05.2021 - 6.6.06.2021 வரை கலந்து கொண்டு "Pedagogy and Research methods" என்ற தலைப்பில் பயிற்சி பெற்றுள்ளார். Swayam Online Course மூலம் "Financial Accounting" என்ற தலைப்பில் 18 வார பயிற்சியை பயின்று வருகின்றனர்.

எமது கல்லூாரியின் உதவி பேராசிரியர் **Mrs.E.பாப்புலட்சுமி** அவர்கள் "Teaching Learning Centre Ramanujan college University of Delhi -ல் ஒரு மாதத்திற்கான Orientation programme-ல் கலந்து கொண்டுள்ளார். மேலும் "Yuvashetra Institute of Management Studies – ல் Significance of commerce in the dynamic world என்ற தலைப்பில் National E-conference - ல் கலந்து கொண்டுள்ளார். Vijay Institute of Management – ல் நடைபெற்ற

International Conference-ல் கலந்து கொண்டு "Impact of Entrepreneurial Performance – A study with special reference to Women Entrepreneurs in Madurai" - என்ற தலைப்பில் ஆய்வு கட்டுரை சமர்ப்பித்துள்ளார். Department of Commerce, University of Madras, Chennai-ல் சார்பில் நடைபெற்ற International Conference – ல் "A Study on Skill and Education with special Reference to Budding Rural" – என்ற தலைப்பில் UGC Care list journal-ல் ஆய்வு கட்டுரை சமர்ப்பித்துள்ளார். Swayam Online Course மூலம் "Financial Accounting" என்ற தலைப்பில் 18 வார பயிற்சியை பயின்று வருகின்றனர்.

எமது கல்லூரியின் உதவி பேராசிரியர் **Mr.K.**மதன்குமார்அவர்கள் Factors Influence On Privacy issues In The E-Banking Websites – A Study with Reference to Commercial Banks in Theni District என்ற தலைப்பில் ஆய்வு கட்டுரை சமர்ப்பித்துள்ளார்.

## B. வேதியியல் துறை : (DEPARTMENT OF CHEMISTRY)

05.01.2022 அன்று தமிழ்நாடு அரசின் உயர்கல்விதுறையில் நடந்த கருத்தரங்கில் வேதியியல் துறைத்தலைவர் ரா.குமரராஜன் அவர்கள் கலந்து கொண்டார்.

ஜீன் 2 முதல் 16 வரை இராமனுஜன் கல்லூரியில் நடந்த புத்தாக்கப்பயிற்சியில் முனைவர்.ஜி.ரவீந்திரன் அவர்கள் கலந்து கொண்டார்.

21.09.2021 முதல் 25.09.2021 வரை அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் நடந்த 'Instrumentation Techniques and Advanced materials "- FDP கருத்தரங்கில் முனைவர்.கு.ரவீந்திரன் அவர்கள் கலந்து கொண்டார்

27.12.2021 முதல் 28.12.2021 வரை அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் நடந்த 'Recent Advances in medicinal Chemistry" என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் வேதியியல்துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.ஜி.ரவீந்திரன் அவர்கள் கலந்து கொண்டார்

2021-2022 ஆம் கல்வியாண்டில் இரண்டு International Paper மற்றும் ஒரு National ஆராய்ச்சி கட்டுரையை வேதியியல்துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.ஜி.ரவீந்திரன் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசின் உயர்கல்வி மூலம் நடந்த "In –service Teacher Traing Programme"-ல் வேதியியல்துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.ஜி.ரவீந்திரன் அவர்கள் 05.05.2022 மற்றும் 06.05.2022 ஆகிய இரண்டு நாட்கள் கலந்து கொண்டார்.

முனைவர்.ஜி.இந்திராமகாலெட்சுமி அவர்கள் தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மன்றத்தின் மூலம் ஆராய்ச்சிக்காக ரூ.7500/- பெற்றுள்ளார்.

முனைவர்.ஜி.இந்திராமகாலெட்சுமி அவர்கள் 22.01.2022-யில் மதுரை காமராசர் பல்கலைகழகத்தில் Development of Sensor என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

முனைவர்.ஜி.இந்திராமகாலெட்சுமி “Certificate of excellence in Reviewing” என்ற விருதை இரண்டு ஆராய்ச்சி கட்டுரை வெளியிடும் நிறுவனத்திடம் இருந்து பெற்றுள்ளார்.

முனைவர்.ஜி.இந்திராமகாலெட்சுமி அவர்கள் 16.09.2021 மற்றும்17.09.2021 மதுரை காமாராசர் பல்கலைக்கழகததில் “Natural Product research” என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் தனது ஆராய்ச்சி கட்டுரையை சமர்பித்துள்ளார்.

முனைவர்.ஜி.இந்திராமகாலெட்சுமி அவர்கள் 2.08.2021 முதல் 06.08.2021 வரை IIRS, Detradun நடத்திய இணையவழி பயிற்சியில் கலந்து கொண்டார்.

முனைவர்.ஜி.இந்திராமகாலெட்சுமி அவர்கள் 09.10.2021 அன்று நமது கல்லூரி தாவரவியல்துறையில் “Seasweeds resources” என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

முனைவர்.ஜி.இந்திராமகாலெட்சுமி அவர்கள் ஈரோடு அரசு கல்லூரியில், ”கோவிட்-19” என்ற தலைப்பில் 11.01.2022 அன்று நடந்த கருததரங்கில் கலந்து கொண்டார்.

## C. கணிதத்துறை (DEPARTMENT OF MATHEMATICS)

கணிதத்துறையின் சார்பாக 13.11.2021 அன்று ‘Realization of Mathematics” எனும் தலைப்பில் Seminar நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக Dr.M.Pitchaimnai, Director i/c, Ramanujan Institute for advanced study in Mathematics, university of madras, Chennai பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

12.04.2022 அன்று ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரியில் நடைபெற்ற JACMAt FEST – 2022 என்ற நிகழ்ச்சியில் எமது துறையில் இருந்து 10 மாணவிகளும் 2 பேராசிரியைகளும் மிகவும் சிறப்பான முறையில் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டனர்.

UGC-ஆல் நடத்தப்பட்ட Swayam – MOOC online course-ல் கணிதத்துறையின் பேராசிரியர்கள் முனைவர்.கே.கிருஷ்ணன், முனைவர்.வி.ஹேமலதா, முனைவர்.ஆர்.ரோகினி, திருமதி.பி.சுகுணாசெல்வராணி மற்றும் முனைவர்.ஏ.ஆர்.மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Orinetation / Refresher –ல் கணிதது‌றையிலிருந்து 4 பேராசிரியாகள் பங்கேற்றனர்.

கணிதத்துறையின் பேராசிரியர்கள் பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகிளல் நடத்தப்பட்ட 37 Seminar/Webniar-ல் பங்கு பெற்றனர்.

முனைவர்.கே.கிருஷ்ணன், முனைவர்.ஆர்.ரோகினி, முனைவர்.ஏ.ஆர்.மணிகண்டன், முனைவர்.வி.செந்தில்குமார் ஆகிய பேராசிரியர்கள் தங்களது 8 ஆய்வுக் கட்டுரையை சர்வதேச இதழில் வெளியிட்டுள்ளனர்.

இந்த கல்வியாண்டில் Ph.D வாய்மொழித்தேர்வு ஒருவருக்கு முடிக்கப்பட்டுள்ளது.

முனைவர்.அ.மகேஷ்வரன் அவர்கள் 23.03.2022 அன்று அரசு கலைக் கல்லூரி, வீரபாண்டியில் நடைபெற்ற கருத்தரங்கில் "Basis Mathematics" எனும் தலைப்பில் Resource Person ஆக பங்கேற்றுள்ளார்.

முனைவர்.கே.கிருஷ்ணன் அவர்கள் 02.11.2021 அன்று திரவியம் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரியகுளத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் "Modelling with Differential education" எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

முனைவர்.கே.கிருஷ்ணன் அவர்கள் 17.12.2021 அன்று ஹாஜி கருத்தா இராவுத்தர் ஹவூதியா கல்லூரி, உத்தமபாளையத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் "Introduction to Querning Theory" எனும் தலைப்பில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்.

முனைவர்.வி.செந்தில்குமார் அவர்கள் 09.03.2022 அன்று மன்னர் திருமலைநாயக்கர் கல்லூரியில் நடைபெற்ற "basic of analysis" எனும் தலைப்பில் Guest Lecture ஆக பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்.

முனைவர்.வி.ஹேமலதா, முனைவர்.ஆர்.ரோகினி, திருமதி.பி.சுகுணா செல்வராணி, முனைவர்.ஏ.ஆர்.மணிகண்டன் ஆகியோர் 05.05.2022 மற்றும் 06.02.2022 ஆகிய இரண்டு நாட்கள் மதுரை மீனாட்சி கல்லூரியில் நடைபெற்ற TANSCHE In-service Training Programme கலந்து கொண்டனர்.

## D. பொருளியல் துறை (DEPARTMENT OF ECONOMICS)

நமது கல்லூரியில் செப்டம்பர் 20.09.2021 முதல் 26.09.2021 வரை Mahindra Pride and Nandhi foundation இணைந்து நடத்திய Soft skill Programme-ல் பொருளாதாரத் துறையைச் சேர்ந்த மூன்றாம் ஆண்டு மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் முனைவர்.S.செந்தில்குமார் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் தேசிய, பன்னாட்டு கருத்தரங்கில் கலந்து கொண்டு சான்றிதழ்களும் பெற்றார்.

பேராசிரியர்கள் முனைவர்.D.ஹேமா, திருமதி.M.ஹேமலதா ஆகியோர் இணைய வழியில் புத்தறிவுப் பயிற்சி பெற்று அதற்கான சான்றிதழ்களையும் பெற்றனர்.

ஏப்ரல் 2020 மதுரை காமராஜர் பல்கலைக்கழக பருவத்தேர்வின் தரவரிசை பட்டியலில் பொருளாதாரத் துறையைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் M.அஜித்குமார், A.ராஜஜோதி, B.சிவக்குமார் ஆகியோர் முறையே 4,5,7 ஆகிய மூன்று இடங்களைப் பெற்றனர்.

12.03.2022 தமிழ்நாடு அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பாக நடத்திய பேச்சுப் போட்டியில் 50க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். அதில் நமது கல்லூரி பொருளாதாரத் துறையைச் சேர்ந்த இளங்கலை மூன்றாம் ஆண்டு மாணவி ம.பிரியா இரண்டாம் பரிசு பெற்றார் அவர்களைப் பாராட்டி தேனி மாவட்ட கலெக்டர் க.வீ.முரளீதரன் அவர்கள் சான்றிதழையும், பரிசையும் வழங்கினார்.

## E. வரலாற்றுத் துறை (DEPARTMENT OF HISTORY)

### இணையவழி கருத்தரங்குகள்

25.01.2022 தேசிய வாக்காளர் தினத்தையொட்டி 17.12.2022 முதல் 20.12.2021 வரை நமது கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு "வாக்களர்களுக்கு விழிப்புணர்வு போட்டிகளை "எனது வாக்கு எனது எதிர்காலம்" எனும் பொருண்மையில் நடத்தி மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

19.07.2021-ல் தொல்லியல் எச்சங்களும் தேனியும் எனும் தலைப்பில் இணையவழி கருத்தரங்கம் வரலாற்றுத் துறையால் நடத்தப்பட்டது.

15.08.2021-ல் 75வது சுதந்திரதினவிழாவை முன்னிட்டு E-Quiz on Indian national Movement என்ற இணைய வழியிலான வினாடி-வினா துறையால் நடத்தப்படட்டதில் மாநில முழுவதுமிருந்து 600-க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

29.10.2021-ல் தமிழ்துறையும், வரலாற்றுத்துறையும் இணைந்து "கீழடியும்-தமிழும்" என்ற தலைப்பில் இணையவழி கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் மதுரை அருங்காட்சிய களப்பிரார் Dr.M.மருதுபாண்டியன் அவர்கள் கலந்து சிறப்புரையாற்றினார்

25.01.2022 முதல் 31.03.2022 வரை தேசிய வாக்காளர் தினப் போட்டிகளை இணையவழியில் நடத்தி தேனி மாவட்ட ஆட்சியரிடம் மாணவ, மாணவியர்களின் போட்டி முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டது.

**பேராசிரியர்களின் பங்களிப்பு முனைவர்.அ.ஞானசேகரன்**

12.01.2022-ல் ஏ.வி.ச. கல்லூரி நாட்டுநலப்பணித்திட்டத்தில் நடத்திய இன்றைய இளைஞர்களின் நலன் மற்றும் மேம்பாடு எனும் விழிப்புணர்வு கருத்தரங்கில் சிறப்பு பேச்சளராக கலந்து கொண்டார்.

20.04.2022-ல் வேலை வாய்ப்பு வழிகாட்டு மையம் நடத்திய உயர்கல்வி 2022 எனும் பொருண்மையில் நடத்திய கருத்தரங்கில் சிறபபுப் பேச்சாளராக கலந்து கொண்டார்.

17.03.2022-ல் நமது கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் மேம்பாடு கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

**முனைவர்.சி.மாணிக்கராஜ்**

ஜீன் முதல் ஆகஸ்ட் வரை சோழ மண்டல வரலாற்று தேடல் குழு நடத்திய மூன்று மாத இணையவழி வகுப்பில் "தொல்லியல் மற்றும் பெணுப்பியலின் அறிமுகம்" எனும் தலைப்பிலான வகுப்பில் கலந்து கொண்டார்.

21.02.2022-ல் சைவ சித்தாந்த துறை நடத்திய பன்னாட்டு கருததரங்கில் "உலகத்தாய் மொழிகள்" எனும் தலைப்பில் கலந்து கொண்டார்.

**கண்டுபிடிப்புகள்**

29.09.2021-ல் திண்டுக்கல், காரியப்பட்டியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு தொல்லியல் சார்ந்த களப்பயிற்சி அளித்த பொழுது பெருங்கற்கால நடுகல் கண்டறியப்பட்டு செய்திதாட்களில் பிரசுரிக்கப்பட்டது.

22.10.2021-ல் மதுரை, பேரையூர் அருகில் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பாறை ஓவியம் கண்டறியப்பட்டு செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்டது.

26.01.2022 திண்டுக்கல், செம்பட்டிகருகிலுள்ள மனைப்பட்டியில் 17-ம் நூற்றாண்டைச் சேர்ந்த வீரக்கல் கண்டறியப்பட்டது.

17.3.2022-ல் திண்டுக்கல், கம்ரளியம்பட்டி, அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு தொல்லியல் களப்பயிற்சியின் போது வில்லியர் நடுகல் கண்டறியப்பட்ட ஊடகங்களில் வெளியிடப்பட்டது.

30.04.2022, திண்டுக்கல், ராமநாதபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு தொல்லியல் களஆய்வுப் பயிற்சியளித்த பொழுது 14-15-ம் நூற்றாண்டைச் சேர்ந்த நடுகல் கண்டறியப்பட்டது.

08.01.2022-ல்ஆண்டிபட்டிக்கருகிலுள்ள, வண்டியூரில் பாறை ஓவியம் கண்டறியப்பட்டு செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்டது.

## F. இளங்கலை கணினி அறிவியல் (Computer Science Department)

06.10.2021 அன்று "குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005" பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் அனைவருக்கும் நடத்தப்பட்டது. சிறப்பு விருந்தினர் திருமதி.S.தெய்வஜோதி இந்தச் சட்டத்தைப் பற்றிய சிறு முன்னுரையை அளித்தார். இதனால் அனைத்து மாணவர்களுக்கும் இச்சட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

08.10.2021 அன்று Fresher’s Day Celebration மற்றும் Computer Club தொடக்க விழாவை ஏற்பாடு செய்தது. இறுதியாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர். திட்டமிட்டபடி காலை 11.30 மணிக்கு சுப்புராஜ் நினைவு அரங்கில் கம்ப்யூட்டர் கிளப் துவக்க விழா தொடங்கியது. இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் முனைவர்.கே.மாடசாமி அவர்கள் வரவேற்றார். முனைவர்.எஸ்.சிவக்குமார், முதல்வர் அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கி தலைமை உரையை ஆற்றினார்.

திரு.K.அனுப்பிரியன், Technical Support-Corporate Trainer, Livewire, சென்னை, ஆன்லைனில் ‘Grapics, Games and Animation using Python” என்ற தலைப்பில் ஒரு சிறந்த உரையை வழங்கினார். கிராபிக்ஸ், கேம்ஸ் மற்றும் அனிமேஷன் ஆகியவற்றில் Python கோடிங்கின் பரந்த பயன்பாடுகள் மற்றும் சாத்தியமான பயன்பாடுகள் சிறப்புப் பேச்சாளரால் நன்றாக விளக்கப்பட்டது. இணைப்பேராசிரியர் முனைவர்.ஆர்.முருகேசன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

20.11.2021 அன்று "Software Testing and it’s significane" என்ற தலைப்பில் ஒரு Webniar ஏற்பாடு செய்யப்பட்டது. விழா மதியம் 2.15 மணிக்கு சுப்புராஜ் நினைவு அரங்கில் தொடங்கியது. உதவிப்பேராசிரியை திருமதி.கே.நித்தியானந்தகுமாரி அவர்கள் வரவேற்றார். முனைவர்.எஸ்.சிவக்குமார் முதல்வர் அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கி தலைமை உரையை ஆற்றினார். இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் முனைவர்.கே.மாடசாமி அவர்கள் தலைமை விருந்தினரை அறிமுகப்படுத்தினார்.

Software Testing பற்றிய தொழில்நுட்ப உரையை, சிறப்பு விருந்தினர் திருமதி அனுஷா மகேஸ்வரன், Senior Test Engineer, Wipro Technologies, Bangalore வழங்கினார். இணைப்பேராசிரியர் முனைவர்.ஆர்.முருகேசன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

16.12.2021 அன்று எங்கள் துறையின் அனைத்து மாணவிகளுக்கும் "பெண்கள் பாதுகாப்பு" குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இணைப்பேராசிரியர் முனைவர். ஆர்.முருகேசன் அவர்கள் வரவேற்றார். திருமதி.கே.நித்தியானந்தகுமாரி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். எங்கள் கல்லூரியின் மகளிர் பிரிவு ஒருங்கிணைப்பாளர் முனைவர்.டி.ராமலட்சுமி, வணிகவியல்துறை உதவிப்பேராசிரியை, பெண்கள் பாதுகாப்பு குறித்து சிறப்புரையாற்றினார். உதவிப்பேராசிரியை முனைவர்.சி.வசந்தி அவர்கள் நன்றியுரை ஆற்றி நிகழ்ச்சி நிறைவுற்றது.

19.03.2022 அன்று, 2009-12 ஆம் ஆண்டின் முன்னாள் மாணவர்கள், எங்கள் துறைக்கு வருகை தந்தனர். மேலும் அவர்கள் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு அவர்களின் வேலை வாய்ப்பு பற்றி ஒரு விழிப்புணர்வை வழங்கினார்கள். மாணவர்களை தங்களது வேலை வாய்ப்பிற்கான எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணலுக்கு நன்றாக தயாராகுமாறு அறிவுறுத்தினார்கள்.

21.03.2022 அன்று பெரியகுளத்தில் உள்ள J.A.பெண்களுக்கான கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கணினி அறிவியல் துறையால் நடத்தப்பட்ட intercollegiate meet "IT Galazy"-யில் எங்கள் மாணவர்கள் பங்கேற்றனர். நவீனா III CS மாணவி Paper Presentation போட்டியில் பரிசு பெற்றார். மற்ற மாணவர்கள் போஸ்டர் தயாரித்தல் மற்றும் டீசர் உருவாக்கம் ஆகியவற்றில் பங்கேற்றனர்.

Kuriniji infotech Pvt, Ltd, போடிநாயக்கனூர் மூலம் ஒரு வார வேலை வாய்ப்பு பயிற்சி நிகழ்ச்சி 27.04.2022 முதல் மூன்றாமாணடு மாணவர்களுக்காக நடத்தப்பட்டது. அவர்களின் பயிற்சியின் மூலம் P.ரகுநந்தன் மற்றும் T.முத்து ஆகிய இரு மூன்றாமாண்டு பயிலும் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

Mathruboomi academy, Hyderabad என்ற நிறுவனத்தின் மூலம் மாணவர்களின் திறனை மேம்படுத்த 29.04.2022 அன்று பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது. இந்த அகாடமியின் நிறுவனர் திரு.நாகபிரசாத் இறுதியாண்டு மற்றும் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் வழிகளைப் பற்றி உரையாற்றினர். அவரது பேச்சு மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இருந்தது.

ஆண்டிபட்டியில் உள்ள பாரத் நிகேதன் பொறியியல் கல்லூரியில் 06.05.2022 அன்று நடத்திய கல்லூரிகளுக்கு இடையேயான போட்டியில் எங்கள் துறையைச் சார்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர். A.ஸ்ரீசரண், III CS, தமிழ்க்கவிதை எழுதுவதில் முதல்பரிசு, S.முத்துநேகா, III CS நெருப்பில்லா சமையலில் முதல் பரிசு பெற்றனர்.

10.05.2022 முதல் 12.05.2022 வரை மூன்று நாள் வேலை வாய்ப்பு பயிற்சி நிகழ்ச்சி எங்கள் கல்லூரியின் Career Guidance Cell மற்றும் Madras Institute of Vocational Education and training, Chennai மூலம் இறுதியாண்டு மாணவர்களுக்காக நடத்தப்பட்டது. அவர்கள் மாணவர்களின் தகவல் தொடர்பு திறன் மற்றும் பிற செயல்பாடுகளை மேம்படுத்த பயிற்சி அளித்தனர். இறதியாக அவர்கள் அனைத்து இறுதி ஆண்டு மாணவர்களுக்கும்தேர்வு மற்றும் நேர்காணல் அமர்வை நடத்தினார்கள். இந்த தேர்வில் எமது துறையின் மூன்றாமாண்டு மாணவர்கள் 11 பேர் தேர்வாகியுள்ளனர்.

15.05.2022 அன்று இந்திய அருங்காட்சியகத்துறை, ஆண்டிபட்டி நடத்திய தமிழ் கட்டுரைப் போட்டியில் A.ஸ்ரீசரண், III CS, மாணவர் முதல் பரிசு பெற்றார்.

எங்கள் கல்லூரியின் 47வது 48வது ஆண்டு விளையாட்டு தினம் 20.05.2022 அன்று கொண்டாடப்பட்டது. இரண்டாம் ஆண்டு மாணவி S.சினேகாகுமாரி இவ்விழாவில் ஓட்டு மொத்த சாம்பியன்ஷிப் (பெண்கள்) கோப்பையை வென்றார்.

**G. தமிழ்த்துறை**

தமிழ்த்துறைத் தலைவர் முனைவர்.க.மலைச்சாமி அவர்கள் 30.09.2021 அன்று தன் விருப்ப ஓய்வு பெற்றார். அன்று தொட்டு முனைவர்.லெ.அலமேலு அவர்கள் தமிழ்த்துறைத்தலைவராக பொறுப்பேற்றுள்ளார்.

தமிழ்த்துறைத் தலைவர் முனைவர்.லெ.அலமேலு அவர்களின் ஒருங்கிணைப்பின்படி 21.02.2022 அன்று உலக மொழிகளின் தாய்மொழி என்ற தலைப்பில் திருச்சி சி.பா.ஆதித்தனார் தமிழியல் ஆய்வுக்கழகக் தலைவர் முனைவர்.தி.நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்புரையாற்ற தமிழ்த்துறையால் இணையவழி கருத்தரங்கம் நடைபெற்றது.

தமிழ்த்துறைத் தலைவர் முனைவர்.லெ.அலமேலு அவர்கள் 02.06.2021 முதல் 16.06.2021 வரை 14 நாட்கள் டெல்லி ராமனுஜம் பல்கலைக்கழகம் சார்பாக நடைபெற்ற இணையவழி புத்தாக்கப் பயிற்சியில் கலந்து கொண்டு நிறைவு செய்துள்ளார். உதவிப்பேராசிரியை திருமதி.வே.மீனா அவர்கள் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஏற்று நடத்தும் புத்தாக்கப் பயிற்சியில் கலந்து கொண்டு நிறைவு செய்துள்ளார். தமிழ்த்துறையில் தமிழ்மன்றம் சார்பாக கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடைபெற்றன. இதில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. 13.01.2022 அன்று திருச்சிராப்பள்ளி செம்மொழி மன்றம் சார்பாக 205 மணி நேர இணையவழி முதல் உலகச் சாதனைப் பன்னாட்டு திருக்குறள்

ஆய்வரங்கில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர்.லெ.அலமேலு அவர்கள் சிறப்புரை வழங்கி ”திருக்குறள் செம்மல் விருதினை” பெற்றுள்ளார்.

2021 - 2022 ஆம் கல்வியாண்டிற்கான பகுதி - I பொதுத் தேர்வில் மதுரை காமராசர் பல்கலைக்கழக அளவில் வேதியியல்துறை மாணவர் ஆர்.கோவிந்தபாண்டி முதல் மதிப்பெண்ணும் கணிதத்துறை மாணவி அழகேஸ்வரி ---- மதிப்பெண்ணும் பெற்று தமிழ்த்துறைக்கு பெருமை சேர்த்துள்ளனார்.

தேனி கம்மவார் சங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 23.03.2022 அன்று சங்க நாதம் தமிழ்மன்றம் தொடக்க விழாவில் துறைத் தலைவர் முனைவர்.லெ.அலமேலு அவர்கள் சிறப்புரை வழங்கியுள்ளார்.

## h.ஆங்கிலத் துறை (Department of English)

21.12.2021 அன்று மதுரை காமராசர் பல்கலைககழகத்தின் ஆங்கிலத் துறையினரால் நடத்தப்பட்ட Shakepeare அவர்களின் ‘king lear” நாடகத்தை காண்பதற்காக துறை மாணவ, மாணவியர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

08.04.2022 அன்று சிவகாசி அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் நடைபெற்ற State level Inter-collegiate Literary Festa (ORCHID 2022) போட்டிகளில் பங்கெடுக்க மாணவ, மாணவியர்களுக்கு பயிற்சி அளித்து அழைத்து செல்லப்பட்டனர். இதற்கு நமது கல்லூரி நிர்வாகம் மனமுவந்து ரூ.12,000/- கொடுத்து ஊக்கப்படுத்தியதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

20.04.2022 அன்று மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியின் ஆங்கிலத்துறை மேடையேற்றம் செய்த Shakespeare அவர்களின் Tempest நாடகத்தை துறையின் ஆசிரியர்கள் கண்டு திறனாய்வு செய்து வந்தனர்.

05.05.2022 முதல் 07.05.2022 முடிய மூன்று நாட்கள் கொச்சின் நகர கல்விச் சுற்றுலாவிற்கு மாணவ, மாணவியர்கள் அழைத்து செல்லப்பட்டனர்.

நமது கல்லூரி IQAC 17.03.2022 அன்று நடத்திய ‘Enchancing Teacher’s Collective Efficancy During pandemic” FDP Programme-ல் துறையின் அனைத்து பேராசிரியர்களும் பங்கு பெற்று சான்றிதழ் பெற்றுள்ளனர்.

சிந்தலச்சேரி, அன்னை தெரசா கல்லூரியில் நடைபெற்ற நேர்முகத் தேர்விற்கு Dr.V.விமலா அவர்கள் 02.08.2022 அன்று Subject Expert-ஆக நிர்ணயிக்கப்பட்டடுள்ளார். பெரியகுளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரிக்கு “Examiner of Question Paper setting” என்ற பொறுப்பு 02.03.2022 அன்று Dr.V.விமலா அவர்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும் SKGC கல்லூரியின் Journals Editorial Board Member-ஆக 11.12.2021 அன்று நியமனம் பெற்றுள்ளார்.

துறையின் பேராசிரியர்கள் பல்வேறு உலகத் தரம் வாய்ந்த Journal-களில் 6க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் எழுதி பிரசுரமாகியுள்ளது.

60க்கும் மேற்பட்ட conference, seminar, FDP, Guest Lecture, Workshop மற்றும் Webinar போன்ற பல்வேறு நிகழ்வுகளில் துறை ஆசிரியர்கள் ஆர்வத்துடன் பங்கெடுத்து சான்றிதழ் பெற்றுள்ளார்.

உதவிப்பேராசிரியர் Dr.V.விமலா அவர்களின் வழிகாட்டுதலில் Ph.D பயின்று வந்த மூன்று மாணவர்கள் தங்களது Thesis-ஐ நிறைவு செய்து Submit செய்துள்ளனர். Dr.B.ஆனந்தபிரசாத் அவர்களிடம் புதிதாக ஒரு மாணவர் தனது Ph.D ஆராய்ச்சி படிப்பிற்காக இவ்வாண்டு பதிவு செய்துள்ளார்.

உதவிப்பேராசிரியர் Dr.V.விமலா அவர்கள் 90க்கும் மேற்பட்ட conference, Seminar, FDP, guest lecture ஆர்வத்துடன் பங்கேற்று சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

Dr.C.பழனிவேல்ராஜன் அவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழக தேனி மாலை நேரக் கல்லூரிக்கு 28.04.2022 அன்று Resource person –ஆக சென்று வந்துள்ளார்.

### i. தாவரவியல் துறை: (Department of Botany)

Dr.C.கோபி அவர்கள் 17.08.2020 முதல் 18.08.2021 வரை உத்தரப்பிரதேசத்தில் உள்ள அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் வனவிலங்கு அறிவயல் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட இணையவழியில் “RS & GIS Applicatioons in Biodiversity Coservation and Management” என்ற தலைப்பில் இரண்டு நாள் பயிலரங்கை வெற்றிகரமாக முடித்துள்ளார்.

முனைவர். C.கோபி அவர்கள் 09.11.2021 அன்று NMSS வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் நடைபெற்ற "Introduction and applications of raman spectroscopy” எனும் தேசிய பயிலரங்கில் பங்கேற்றார்.

முனைவர். C.கோபி அவர்கள் 02.08.2021 முதல் 06.08.2021 வரை 5 நாட்கள் DBT Star கல்லூரியில் நடைபெற்ற "Advancing towards sustainable Teaching and Learning Padagogy” எனும் தேசிய அளிவலான Faculty Development Programme-யில் கலந்து கொண்டார்.

முனைவர். C.கோபி அவர்கள் இணையவழியில் 22.06.2022 முதல் 28.06.2022 வரை 7 நாட்கள் நடைபெற்ற Faculty Development Programme-யில் கலந்து கொண்டார்.

## J. இளங்கலை வணிக நிர்வாகவியல் துறை (சுயநிதிப்பிரிவு) (BBA Department)

29.06.2021 அன்று மதுரை நாடார் மகாஜன சங்கம் எஸ்.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் நடைபெற்ற ‘INTELLECTUAL PROPERTY RIGHTS” என்ற தலைப்பில் இணையவழி கருத்தரங்கில் பேராசிரியர் திரு.கா.பராத் ராஜா அவர்கள் கலந்து கொண்டார்.

03.07.2021 அன்று காந்தி கிராமம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ‘REBBUILD BETTER TOGETHER : COOPERATIVES FOR A BETTER RECOVERY” என்ற தலைப்பில் பன்னாட்டு இணையவழி கருத்தரங்கில் பேராசிரியர் திரு.கா.பராத் ராஜா அவர்கள் கலந்து கொண்டார்.

23.07.2021 அன்று Department of Corporate Secretaryship (Shift – I) மற்றும் IQAC Anna Adarsh college for Women “FINANCIAL PLANNING and INVESTMENT AVENUES FOR DIFFERENT SEGMENTS OF INVESTORS” என்ற தலைப்பில் இணையவழி கருத்தரங்கில் பேராசிரியர் திரு.கு.பிரசாத் அவர்கள் கலந்து கொண்டார்.

10.09.2021 அன்று பெரியகுளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரியில் Department of commerce with computer science நடத்திய ‘EMERGING BUSINESS TRENDS DRIVEN BY COVID 19” என்ற தலைப்பில் பன்னாட்டு இணையவழி கருத்தரங்கில் பேராசிரியர் திரு.கா.பராத் ராஜா அவர்கள் கலந்து கொண்டார்.

நமது கல்லுரியில் 06.10.2021 அன்று வணிகநிர்வாகவியல் துறை சார்பாக ‘AN OVERVIEW STOCK MARKET” என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக Mr.B.Badrinarayanan, M.B.A., Seniar Consultant – B.SE, Chennai அவர்கள் கலந்து கொண்டார்.

13.10.2021 அன்று உத்தமபாளையம் ஹாஜி கருதராவுததர் ஹவுதியா முன்னாள் மாணவர்கள் சங்கம் சார்பில் நடத்தப்பட்ட ‘WORLD STUDENTS DAY” என்ற கருத்தரங்கில் திரு.கா.பராத்ராஜா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

தென்காசி அரசு கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் 16.11.2021 மற்றும் 17.11.2021 ஆகிய இரண்டு தினங்கள் “WEALTH MANAGEMNET 2021” என்ற தலைப்பில் நடைபெற்ற இணையவழி கருத்தரங்கில் திரு.கு.பிரசாத் அவர்கள் கலந்து கொண்டார்.

கோயம்புத்தூர் நேரு கலை மற்றும் அறிவியல்கல்லூரியில் 26.11.2021 அன்று “AN OVERVIEW OF INTELLECTUAL PROPERTY” என்ற தலைப்பில் நடைபெற்ற இணையவழி கருத்தரங்கில் திரு.கா.பராத் ராஜா அவர்கள் கலந்து கொண்டார்.

ஹைதராபாத் மௌலானா ஆதாத் தேசிய உருது பல்கலைக்கழகம், மேலாண்மை மற்று வணிகவியல்துறை சார்பாக 30.11.2021 அன்று “STARTUPS AND ENTREPERNEURSHIP : LET’S MAKE IT SIMPLE” என்ற தலைப்பில் நடைபெற்ற இணையவழி பன்னாட்டு கருத்தரங்கில் திரு.கா.பராத் ராஜா அவர்கள் கலந்து கொண்டார்.

நமது கல்லூரியில் 20.12.2021 அன்று வணிகநிர்வாகவியல் துறை சார்பாக ‘A VISION OF BUSINESS LAW” என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக Mr.R.Sathyamoorthi, B.A., B.L., Seniar Advocate, Bodinayakanur அவர்கள் கலந்து கொண்டார்.

நமது கல்லூரியில் “Enhancing Teachers Collective Efficacy during pandemic” என்ற தலைப்பில் நடைபெற்ற கருததரங்கில் வணிகநிர்வாகவியல் துறை பேராசிரியர்கள் கலந்து கொண்டார்கள்.

நமது கல்லூரி வணிக நிர்வாகயில் துறை மாணவர்கள் மூன்று நாள் INDUSTRIAL VISITA ஆக Cochin and Ooty – Bench mark Tea factory சென்று பார்வையிட்டு வந்தனர்.

நமது கல்லூாரி வணிக நிர்வாகவியல் துறையும் தி இன்ஸ்டிட்யூட் ஆப் கம்பெனி செரக்டரிஸ் ஆப் இந்தியா இணைந்து 23.03.2022 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது

திரவியம் கல்லூாரியில் 25.03.2022 அன்று நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையான போட்டிகளில் நமது கல்லூரி வணிக நிர்வாகவியல் துறை மாணவர்கள் S.Gayathri Devi, S.Ashifaalfin, N.Karthiga, S.Hemalatha மற்றும் M.loganayaki ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

நமது கல்லூரியில் வணிகநிர்வாகவியல் துறையில் ஒவ்வொரு வாரம் வெள்ளிக்கிழமை 5-வது பாடவேளையில் மாணவர்களின் அறிவுக்கூர்மையை வெளிப்படுத்தும் வகையில் "MANAGEMENT PROGRAMME” நடத்தப்பட்டு வருகிறது

வணிகநிர்வாகவியல் துறை மாணவர் திரு.எம்.ஷாஜித் என்பவர் பல்கலைக்கழக வாரியாக ஐந்தாவது தரவரிசை பெற்றுள்ளார்.

நமது கல்லூாியின் நூலகத்துறை சார்பாக நடைபெற்ற போட்டியில் வணிகநிர்வாகவியல்துறை மாணவர்கள் பரிசுகளை வென்றார். அதில் Remembering போட்டியில் இரண்டாம் ஆண்டு மாணவர் அஜய்குமார் முதல் பரிசு பெற்றார். முதலாம் ஆண்டு மாணவர் ஜீவா இரண்டாம் பரிசு பெற்றார். Book Review போட்டியில் இரண்டாம் ஆண்டு மாணவர் அஜய்குமார் இரண்டாம் பரிசு பெற்றார். முதலாம் ஆண்டு மாணவர் விஷால் பிரியன் மூன்றாம் பரிசு பெற்றார். Verse writing போட்டியில் இரண்டாம் ஆண்டு மாணவர் சுரேந்தர் முதல் பரிசு பெற்றார்.

ஆண்டிபட்டி பாரத் நிக்கேதன் பொறியியல் கல்லூாியில் 06.05.2022 அன்று நடைபெற்ற கல்லூரிகளுக்கு இடையேயான போட்டியில் வணிகநிர்வாகவியல்துறை மாணவர்கள் பங்கேற்றார்கள்.

## K. முதுநிலை வணிகவியல் துறை (சுயநிதிப்பிரிவு) (Department of Commerce – SF)

முதுநிலை வணிகவியல் துறையைச் சார்ந்த பேராசிரியை M. சரண்யாதேவி, அவர்கள் முனைவர் பட்டத்திற்கான ஆய்வறிக்கையை சமர்ப்பித்துள்ளார். மேலும் பேராசிரியை R.ரேவதி அவர்கள் தேசிய அளவிலான தகுதி தேர்வில் வெற்றி பெற்றுள்ளார். மாணவர்கள் பல்வேறு கல்லூரிகளில் நடந்த பன்முகப் போட்டிகளில் பங்கேற்றுள்ளார். மூன்றாம் ஆண்டு மாணவர்கள் கடைசிப் பருவத்திற்கான வேலைப் பயிற்சிக்காக பல்வேறு நிறுவனங்களுக்கு சென்று வந்துள்ளனர். துறைப் பேராசிரியர்கள் பல்வேறு கருத்தரங்குகளில் பங்கு ஏற்று ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளனர்.

## L. கணினிப்பயன்பாட்டு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை :

## (BCA & B.Sc (IT) Department)

நமது கல்லூரியில் கணிதத்துறையின் சார்பாக நடைபெற்ற "Vedic Mathematics"-webinar-ல் துறையின் மாணவர்கள் பங்கேற்றனர்.

06.04.2022 அன்று துறையின் சார்பாக "Artifical Intelligence Fundamentals"-webinar உதவிப்பேராசிரியர் ஸ்ரீ கிருஷ்ணசாமி பெண்கள் கல்லூரி, சென்னை D.ராதா, அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அரசு பொறியியல் கல்லூரி, தருமபுரியில் நடைபெற்ற "Block chain technolgy" என்ற FDP- நிகழ்ச்சிற்கு துறைத்தலைவர் திரு.கே.மோகன் குமாரமங்கலம் அவர்கள் கலந்து கொண்டார்.

பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற "Cryptocurency & block chain technologies" என்னும் நிகழ்ச்சிகு துறைப்பேராசிரியர்கள் திரு.பி.விக்னேஷ்வரன், திரு.கே.மோகனகுமாரமங்கலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

GL Bajaj institute-யில் நடைபெற்ற "Recent Trends in Computer Science" என்னும் FDP நிகழ்ச்சிற்கு துறைப்பேராசிரியர்கள் திருமதி.எஸ்.ரோகினி மற்றும் திரு.எஸ்.புவனேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

Periyakulam Jeyaraj Annapackiyam college for women-யில் நடைபெற்ற "Data driven technologies" என்னும் இணையவழி Seminar-ல் துறைப்பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

BMS college of Engineering-யில் நடைபெற்ற "5G Technology" என்னும் இணையவழி FDP Programme-ல் துறைப்பேராசிரியர் திருமதி.எஸ்.புவனேஸ்வரி கலந்து கொண்டார்.

GL Bajaj Institute of Technology-யில் நடைபெற்ற "Data Science" என்னும் இணையவழி FDP Programme-ல் துறைப்பேராசிரியர் திருமதி.எஸ்.புவனேஸ்வரி கலந்து கொண்டார்.

2021 - 2022-ஆம் கல்வி ஆண்டில் வேலை வாய்ப்பு வழிகாட்டி மையம் மூலம் நடைபெற்ற "Career Training and Placement Programme"-ல் துறையை சேர்ந்த 3 மாணவிகள் மற்றும் 5 மாணவர்கள்'Kuinging Technolgy Solution Provate Limited" Company-க்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**M. ஆங்கிலத் துறை (சுயநிதிப்பிரிவு) (Department of English – SF)**

Phoenix Literary Association inauguration 2021-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதி முனைவர்.M.தேவிச்சந்திரா அவர்கள் மாணவர்களுக்கு 'Strategies of Reading Literature" என்ற தலைப்பில் இணைய வழியில் கருத்தரங்கு நடைபெற்றது.

கல்லூரி மாணவர்களுக்கு E-Quiz 15 அக்டோபர் முதல் 18 அக்டோபர் வரை நடைபெற்றது.

ஆங்கிலத்துறை மாணவர்கள் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் டிசம்பர் மாதம் 21-ஆம் தேதி "King Lear" என்ற நாடகத்தை காண்பதற்கான சென்று வந்தனர்.

09.10.2021 அன்று 'Look Bank in Anger" நாடகம் நமது கல்லூரியில் சுப்புராஜ் நினைவு அரங்கில் திரையிடப்பட்டது.

மதுரை தியாகராஜர் கல்லூரியில் நடைபெற்ற Shapkespear-ன் 'The Tempest" நாடகத்திற்கு இளங்கலை, முதுகலை ஆங்கில மாணவ, மாணவியர்கள் பார்வையாளர்களாக அழைத்துச் செல்லப்பட்டனார்.

Phonenix Literay Association சார்பாக Quiz, Poster mating, Soap carving, Art from waste, connection, Spell Bee போட்டிகள் நடைபெற்றன.

Shakespeare The Merchant of Venice திரைப்படம் மாணவ, மாணவியர்களுக்கு திரையிடப்பட்டது.

**N. இயற்பியல் துறை (SF)**

நமது கல்லூரியில் 09.03.2022 அன்று இயற்பியல் துறையின் சார்பாக HAM Radio – A scientific Instrument used for Disaster managemnt" என்ற தலைப்பில் ஒரு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சி Prof.V.ரமேஷ்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதில் HAM Radio பற்றியும் அதன் பயன்பாடுகள் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இயற்பியல்துறை சுயநிதிப்பிரிவின் சார்பாக மாணவர்களுக்கு 25.03.2022 மற்றும் 26.03.2022 ஆகிய இரண்டு நாட்கள் தொழில்துறை வருகை மற்றும் கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டது. ஊட்டி Radio Astronomy centre தொழில்துறை வருகைக்காக முடிவு செய்யப்பட்டு மாணவர்கள் சென்று வந்தனர்.

இயற்பியல் துறையின் பேராசிரியர் Dr.V.நாகராஜன் அவர்கள் சையது அம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 21 நாட்கள் நடைபெற்ற FDP-யில் 06.04.2022 அன்று ‘Recent technique in organometallic crystal Growth for NLO applications” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

09.04.2022 அன்று Recent trends in physics – 3 D printing என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம் Dr.K.பிரேம் ஆனந்த தலைமையில் நடைபெற்றது. இதில் எதிர்பாராத விபத்துகளின் போது உடலுறுப்புகளை இழக்க நேர்ந்தாலும் அதனை 3D Printing முறையில் செயற்கையான உறுப்புகளை பொருத்துதல் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

நமது கல்லூரியில் SFC மற்றும் IQAC இணைந்து நடத்திய பள்ளி தலைமையாசிரியர்களுக்கு நடத்திய “Enhancing Teachers Collective Efficancyy during pandemic” நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தி இயற்பியல்துறை சுயநிதிப்பிரிவு துணை நின்றது.

நமது கல்லூரியில் SFC நடத்திய பள்ளி மாணவர்களுக்கான Carrier Guidence Programme தொடர்ச்சியாக இயற்பியல் துறை சுயநிதிப்பிரிவு மாணவ, மாணவியர்கள் 20.04.2022 மற்றும் 21.04.2022 ஆகிய இரண்டு நாட்கள் அறிவியல் கண்காட்சியை சிறப்பாக நடத்தினர். கண்காட்சியில் Working model, Static model என பலவகையானவை இடம் பெற்றன.

இயற்பியல்துறை பேராசிரியர் Dr.S.கார்த்திகாராணி அவர்கள் நிலக்கோட்டை அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற International conference ICEIB2022-ல் “Green Synthesis and Charaterization of copper oxide Nanoparticles” என்ற தலைப்பில் paper presentation செய்துள்ளார்.

### O. வேதியியல் துறை (SF)

